மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி பர்சேஸ் டாக்ஸ் பற்றியது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் எத்தனை? தனியார் சர்க்கரை ஆலைகள் எத்தனை இருக்கின்றன? தள்ளி வைக்கப்பட்ட பர்சேஸ் டாக்ஸை வசூல் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை நான் தெரிவித்தேன். 20 சதவிகிதம் உடனே கட்டச் சொல்லி, கட்டியிருக்கிறார்கள். மீண்டும் 5 சதவிகிதம் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் 10; தனியார் சர்க்கரை ஆலைகள் 9; தமிழக அரசுக்குச் சொந்தமான சர்க்கரை ஆலைகள் 2, ஆக மொத்தம் 21 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தள்ளிவைக்கப்படாத ஆண்டுகளில் அந்த வரி முறையாக வசூலிக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தள்ளிவைக்கப்படாத ஆண்டுகளில் அந்த வரிகள் முறையாக வசூலிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பர்சேஸ் டாக்ஸ் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வருமானம் வருகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 2 கோடிக்கு மேல் வரும்.

ஆரம்பக் கல்வி முறையை மாற்றும் திட்டம்.

*வினா எண். 798—திரு. இல. பலராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பக் கல்வி முறையை மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

1981 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) இல்லை. எனினும், எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு பயிற்றுவிப்பதற்கு வகை செய்யும் நோக்குடன் அவ்வகுப்பை நடுநிலைப்பள்ளிகளிலிருந்து உயர்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றலாமா என்பது குறித்து கருத்து அறியப்பட்டு வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துள்ளித் திரிகின்ற பிராயத்திலே இருக்கின்ற சிறார்களுக்கு நல்ல முறையில் கல்விப் பயிற்சி அளிக்கின்ற முறையில், மாணவர்—ஆசிரியர் விகிதம் அதாவது சில பள்ளிகளில் 20, 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருக்கிறார், இந்த முறையில் மாணவர்—ஆசிரியர் விகிதத்தைக் குறைத்து, அதிக கவனம் செலுத்துகின்ற முறையில் மாணவர்—ஆசிரியர் விகிதத்தை உயர்த்துவதற்குப் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து வருகின்ற அடிப்படையிலே, நிதி ஆதாரங்களைப் பொறுத்து ஆண்டுக்கு ஆண்டு மேற்கொண்டு ஆசிரியர்களை நியமித்து வருகிறோம்.

திரு. ஏ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், நகராட்சி துவக்கப்பள்ளிகள், உதவி பெறும் பள்ளிகள், அரிசன நல துவக்கப் பள்ளிகள் ஆகியவைகளை ஒருங்கிணைக்க அரசு முடிவெடுக்குமா ? அவைகளை சீர்படுத்துவதற்கு ஒரு கல்வி வாரியம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத்தலைவர் : கேள்வி ஆரம்பக் கல்வி முறையைப் பற்றியது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது, நடுநிலைப் பள்ளியிலுள்ள 8 ஆம் வகுப்பை உயர்நிலைப் பள்ளியோடு சேர்த்து, அதற்கு பி. டி. ஆசிரியர்கள் போடும் செயற்குறிப்பு இருப்பதாகவும், அது ஆய்வில் இருப்பதாகவும் இங்கே பதில் சொன்னார்கள். ஆனல், இங்கே கேள்வி ஆரம்பக் கல்வியைப் பற்றியது. அதிலே ஏதாவது மாற்றம் இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? அந்த மாற்றத்தில் இளைஞர்களுக்கு நல்ல பயிற்சியைக் கொடுப்பதற்கு)என்ன திட்டம் வைத்திருக்கிறது ?

[1981 ஏப்ரல் 20

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளி, ஆரம்பப் பள்ளி, எலிமெண்டரி எஜுகேஷன் அடிப்படையில் இந்தப் பதில் தரப் பட்டிருக்கின்றது. 8-ஆம் வகுப்பு என்று சொல்லப்படுவது, 11 ஆண்டுக்கால எஸ். எஸ். எல். சி. படிப்பு. 10 ஆண்டு காலமாக அதைக் குறுக்கிய பிறகு, 8-ஆம் வகுபிப்ன் தரம் கொஞ்சம் உயர்ந்திருக்கிறது. இந்தக் கல்வியை செகண்டரி கிரேடு படித்த வர்கள் மாணவர்களுக்குச் சொல்லித் தருவதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. மாணவர்கள் தரம் குறைந்துகொண்டே இருக்கி றது என்ற ஒரு பொதுவான கருத்து இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில்தான் தரமான கல்வியைத் தரவேண்டுமென்று 1 முதல் 12 வகுப்புகள் என்று சொல்லிக் கொண்டு, இடையிலே 8 ஆம் வகுப்பு தரமில்லாத கல்வியைத் தந்தால், அது பலஹீன மான பகுதியாக மாறி, மேற்கொண்டு தருகின்ற கல்வி பயனற்று போய்விடும் என்ற அந்த அடிப்படையிலேதான் நாம் கருத்து அறிந்து வருகிறோம். மற்றவர்களுடன் ஆலோசித்து, உரிய காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆரம்பக் கல்வி ஊராட்சித் துறையின் கீழும், உயர் நிலைக் கல்வி, மேல் நிலைக் கல்வி அரசாங்கத்தின் நேரடிப் பார்வையில் இருக்கிறது. இந்த நிலையை மாற்றி, கல்வித் துறை அனைத்தையும் ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர ஒரு கல்வி வாரியம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, வாரியம் அமைக்கின்ற யோசனை இப்போது எதுவும் இல்லை. ஆனால், மேல்நிலைக் கல்வி, உயர் நிலைக் கல்வி எப்படி அரசாங்கத்திடம் இருக்கிறதோ அப்படித் தான் தொடக்கக் கல்வியும் இருக்கிறது. ஆனால், ஆசிரியர்கள், பள்ளிக்கூட கட்டிடங்கள் பொறுப்பு பெரும்பாலாக ஊராட்சித் துறையிடம் இருக்கிறது. இதைப் பற்றிச் சிந்தித்து, அந்த ஆசிரியர்களையும், அரசு ஊழியர்களாக்குவது என்ற ஒரு முடி வுக்கு வந்திருக்கிறோம்.

மாமல்லபுரத்தில் உள்ள சிற்பக்கலை மற்றும் கட்டிடக் கலை பயிலகம்.

*வினா எண். 799—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாமல்லபுரத்தில் உள்ள சிற்பக்கலைக் கூடத்தில் தற் போது எத்தனை பேர் பயிற்சி பெறுகிறார்கள் ?